Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATH-M    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    கார்த்திகை 12    ( 27-11-93 )    சனிக்கிழமை    ஓசை 282

## இழுவைப்படகுகள் பழுது பொருள் இறக்கல் தாமதம்

பருத்தித்துறை இறங்குதுறையில் நல்ல நிலையில் போதிய இழுவைப் படகுகள் இல்லாத காரணத்தால் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மேலும் தாமதமடைந்து வருகின்றன. தற்போது இத்துறைமுகத்தில் நல்ல நிலையில் அல்லாத நான்கு இழுவைப்படகுகள் மட்டுமே உள்ளன போதிய இழுவைப் படகுகள் இல்லாத காரணத்தினால் நேற்று 'வாதுவ' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்க முடியாமல் காங்கேசன்துறைக்கு திரும்பிச்சென்றது 'குமாரி' சப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நெருங்கி வருவதால் நான்கு இழுவைப் படகுகளும் அக்கப்பலுககே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# தனியரசு அமைக்கப் போராடுவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழி இல்லை!

## மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**"சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத் தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. அந்தப்பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை" இவ்வாறு மாவீரர் நாளையொட்டித் தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.**

தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளையொட்டி விடுத்த செய்தியின் முழு விபரமும் வருமாறு.


எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திரச் சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவு கூரும் நன்நாள்.

ஆண்டாண்டு காலமாக அடிமைவிலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை, வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றிவிட்ட வீர மறவர்களை நாம் நினைவு கொள்ளும் புனித நாள்.

எமது நாடு எமக்கே சொந்தம், என்ற உரிமைக் குரலை உலகெங்கும் முழங்கச்செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசியநாள்.



## கிழக்கில் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அடுத்த வருட முற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தலையும் வவுனியாவில் நகரசபை தேர்தலையும் நடத்தும் தனது திட்டத்தை சிறிலங்கா அரசு ஒத்திவைத்துள்ளது. இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவிப்பில் வேட்பாளர் நியமனப் பத்திரம் ஏற்கப்படும் திகதியை பின்போடுமாறு பல அரசியற்கட்சிகள் கேட்டதற்கிணங்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட முன் வந்த பல அரசியற் கட்சிகள் வேட்பாளர் மனுவை ஏற்றுக்கொள்ள கொடுக்கப்பட்ட கால அவகாசம் போதுமானதல்ல என்று முறைப்பாடு செய்துள்ளனர். பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு செலவு திட்டம் மீதான விவாதம் காரணமாக தமது வேட்பாளர் பட்டியல்களை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக அவர்கள் கூறினர். இந்த வேண்டுகோளை ஏற்று உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த விடுக்கப்பட்ட அறிவித்தல்களை அவசர கால

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மாவீரர் நாள் துக்கதினமல்ல ஒரு தேசிய எழுச்சி தினம்!

## மணியோசை ஒலிக்க, சுடரொளி வீச நள்ளிரவு மாவீரர் நாள் ஆரம்பம்

**யரசு என்ற ஒரே பாதையைத் தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. அந்தப்பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை" இவ்வாறு மாவீரர் நாளையொட்டித் தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.**

தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளை யொட்டி விடுத்த செய்தியின் முழு விபரமும் வருமாறு.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திரச் சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவு கூரும் நன்நாள்.

ஆண்டாண்டு காலமாக அடிமைவிலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை, வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றிவிட்ட வீர மறவர்களை நாம் நினைவு கொள்ளும் புனித நாள்.

எமது நாடு எமக்கே சொந்தம், என்ற உரிமைக் குரலை உலகெங்கும் முழங்கச்செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசியநாள்.

## மாவீரர் நாள் துக்கதினமல்ல ஒரு தேசிய எழுச்சி தினம்!

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல. நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோகதினம் அல்ல. இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம் எமது தேசம் சுதந்திரம்வேண்டி உறுதி பூணும் புரட்சி தினம்.

மாவீரர்கள், ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களதுசாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.

எமக்கு ஒரு நாடுவேண்டும்; எமது மக்களுக்கு விடுதலைவேண்டும்; எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சியவேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே, எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும், எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

இந்த நிலத்தின் நெஞ்சில் படுத்துறங்கும் எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்த சுதந்திரப் பிரகடனங்களின் பேரொலி எழுகிறது ஆறாயிரத்திற்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சி கொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது.

## சோதனைகளைச் சந்தித்தபோதும் இலட்சியத்தில் நாம் தடுமாறவில்லை


இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்ட வரலாறு நீண்டு செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்ட கால இடைவெளியில், நாம் எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை; தடுமாறியதும் இல்லை. தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.

தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத் தவிர, தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை எனத் தீர்மானங்கள் நிறைவேற்றி, மக்களிடம் மனுப்பெற்ற கட்சிகளும், ஆயுதப்போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவமுடியுமென ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்களும் எப்பொழுதோ தமது அரசியற் குறிக்கோளைக் கைவிட்டுத் தமிழ் இனத்திற்குத் துரோகம் இழைத்து நிற்கின்றனர் எமது இயக்கம் மட்டுமே அன்றிலிருந்துஇன்றுவரை, வரித்துக்கொண்ட குறிக்கோளிலிருந்து வழி தவறவில்லை.

## ஆதிக்க சக்திகளால் எம்மை ஆட்டம் காணவைக்க முடியவில்லை!

தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் அல்ல. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாதது அல்ல. பிரதேச வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை இந்தச் சவால்கள் எழுந்தபொழுதெல்லாம் நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும் நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டம் காணச் செய்யவில்லை.

(6ஆம் பக்கம் பார்க்க)



...யும் நடத்தும் தனது திட்டத்தை சிறிலங்கா அரசு ஒத்தி வைத்துள்ளது. இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவிப்பில் வேட்பாளர் நியமனப் பத்திரம் ஏற்கப்படும் திகதியை பின்போடுமாறு பல அரசியற்கட்சிகள் கேட்டதற்கிணங்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போதுமானதல்ல என்று முறைப்பாடு செய்துள்ளனர். பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு செலவு திட்டம் மீதான விவாதம் காரணமாக தமது வேட்பாளர் பட்டியல்களை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக அவர்கள் கூறினர். இந்த வேண்டுகோளை ஏற்று உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த விடுக்கப்பட்ட அறிவித்தல்களை அவசர கால

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மணியோசை ஒலிக்க, சுடரொளி வீச நள்ளிரவு மாவீரர் நாள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய விடுதலைக்காக தியாக மரணமடைந்து தமிழீழ மக்களின் மனங்களில் நிலைத்துவிட்ட மாவீரர்களின் நினைவாக மணியோசை ஒலிக்க தமிழீழத் தேசமெங்கும் தீபச் சுடர்கள் ஒளிவீச, தமிழீழ மக்கள் மௌன அஞ்சலி செலுத்த நேற்று நள்ளிரவு முதல் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின

தமிழீழத்தின் அனைத்துப் பகுதியிலும் உள்ள ஆலயங்கள். தேவாலயங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் இருந்து நேற்று இரவு சரியாக 12 மணி ஒரு செக்கன் முதல் மணியோசை காற்றிலே கலந்து ஒலித்தது. தியாக மரணமடைந்த மாவீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட இம்மணியோசை சரியாக 12 மணி இரண்டு நிமிடம் வரை ஒலித்தது. மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இரவு முழுவதும் கண்விழித்திருந்த மக்கள் அனைவரும் நினைவொலிகேட்டதும் சமகாலத்தில் எழுந்து நின்று மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர். சரியாக இரண்டு நிமிடங்கள் இம்மௌன அஞ்சலி நீடித்தது. இந்த இரு நிமிடங்களும் தமிழீழம் முழுவதும் மாவீரர்களுக்கான நினைவொலிகளைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை. வீடுகளில் தங்கியிருந்த அனைவரும் மேற்படி இரு நிமிடங்களிலும் தமது அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்திவிட்டு எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர். வீதிகளில் சென்று கொண்டிருந்த மக்களும், வேகமாகச் சென்று கொண்டிருந்த வாகனங்களும் மேற் குறிப்பிட்ட நேரம் வந்ததும் ஆங்காங்கே தரித்து நின்றும், வாகனங்களை விட்டு இறங்கியும் மௌன அஞ்சலி செலுத்தினர்

இதைத் தொடர்ந்து மாவீரர்களின் நினைவாக நினைவுச்சுடரேற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் முக்கிய சுடரேற்றும் வைபவங்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அனைத்து மாவீரர்களின் கல்லறைகளிலும் நினைவுச் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன. ஒவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் பாடசாலை மீது சுப்பர் சொனிக் குண்டுவீச்சு;

### ஆசிரியைகள், மாணவிகள் உட்பட பலர் காயம்

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படையின் சுப்பர் சொனிக் குண்டு வீச்சு விமானம் கொக்குவில் திருநெல்வேலி பகுதிகளில் நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட ஆறு பேர் படுகாயமடைந்ததுடன் பாடசாலை மற்றும் பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன. நேற்றுக்காலை 10. 30 மணியளவில் யாழ்குடாநாட்டின் வான்பரப்பில் திடீரென வட்டமிட்ட சுப்பர் சொனிக் விமானம் ஒன்று திருநெல்வேலி கலாசாலை வீதிக்கு அண்மையில் ஒரே தடவையில் இரு குண்டுகளை வீசியதுஇவ் இருகுண்டுகளும் வளவு ஒன்றிற்குள் வீழ்ந்து வெடித்ததில் இரு குழிகள் காணப்படுகின்றன.

இதன்டோது கனகன் செல்வநாயகம் (வயது21) மாணிக்கராசா முருகேசு(வயது68) ஆகியோர் படுகாயமடைந்தனர். இதில் முருகேசு என்பவரின் வலது கால் துண்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் சிவபாதம், விஜயரட்ணம் ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்தன, சம்பவவேளை வீடுகளில் எவரும் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து கொக்குவில் கோவில் வீதியில்இருக்கும் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி மீது சுப்பர் சொனிக் இரு குண்டுகளை வீசியது இதனால் உப அதிபர் ஆசிரியர், மற்றும் மூன்று மாணவிகளும் காயமடைந்ததுடன் பாடசாலையும் சில வீடுகளும் சேதமடைந்தன.

மேற்படி தாக்குதலின்போது உபஅதிபரானதம்பிராசாசிறி பற்குணம், ஆசிரியை திருமதி ராஜரட்ணம் (வயது 44) மற்றும் மாணவிகளான அம்பிகாபதி சுமித்திரா (வயது 15) விக்கினராஜா அஜந்தினி (வயது 15) சிவகுமார அகல்ஜா ஆகியோரே காயமடைந்தவர்களாவர் பாடசாலை கட்டடத்தின் ஒரு பகுதி தரைமட்டமாகியுள்ளதுடன் விஞ்ஞான கூடமும் சேதமடைந்தது. இதனால் பாடசாலை தளபாடங்கள் சிதறிக்காணப்படுவதுடன் இலவச பாடப்புத்தகங்களும் சில ஆவணங்களும் சேதமடைந்தன.

மேலும் ரஞ்சிதானந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

இனிய ஈழம் மலரும் - நம்
புதல்வர் கனவு பலிக்கும்
புரட்சிக்கனலும் வெடிக்கும் - இங்கு
புதிய நாடு பிறக்கும்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சண்முகராசா ஜெகதீஸ்வரி என்பவரது (இல 656391987V) அடையாள அட்டையும், சிறுதொகைப் பணமும், பொலிஸ் றிப்போட்டும் பேர்சுடன் கிளாலி ஏறு துறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி- 8011)

### மாமைட் போத்தல் தேவை

பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய சகல அளவிலுமான வெற்றுமாமைட் (MARMITE) போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட் 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி- 8004)

### கடனுக்கு மீன்பிடி வலை

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிற்கு பலவேறு உதவிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் வடமராட்சி கடற்புலிகள் மாவட்டத்திற்கு உட்பட்ட கடற்றொழிலாளருக்கு நவிண்டிலில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடற் புலிகள் அலுவலகத்தில் வைத்து இன்று 27ஆம் திகதி கடனடிப்படையில் வலை விநியோகம் செய்யப்படவுள்ளது.

### வீதி விளக்குகளுக்கு ஓராண்டு பூர்த்தி

யாழ் மாநகர சபை அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைத்து வந்த வீதி விளக்குப்பணி அண்மையில் ஓராண்டை நிறைவு செய்துள்ளதாக யாழ், மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இனி அதன் இரண்டாம் ஆண்டில் மேற்படி பணிமேலும் விருத்தி செய்யப்பட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

---

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி

## ஆண்டு 6 அனுமதிப்பரீட்சை-1994

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி காரியாலயத்தில் பெற்று 7-12-93க்கு முன்னர் பூர்த்திசெய்து ஒப்படைக்கவும் 01-02-83-க்கும். 31-01-84க்கும் (இருதினங்களும் உட்பட) இடைப்பட்ட காலத்தில் பிறந்த ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**பரீட்சைத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

ஹாட்லிக்கல்லூரி அதிபர்
பருத்தித்துறை. (6707)

---

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

## கல்வியாண்டு 1994/95

பின்வரும் பாடநெறிக்கான விரிவுரைகள்

**5-12-93 இல் ஆரம்பமாகின்றன**

**கலைமாணி** B A.
**விஞ்ஞானமாணி** B Sc (புள்ளி விபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். 1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 2-12-1993**

விண்ணப்பப் படிவத்தினையும், விபரத் திரட்டினையும் பெறவிரும்புவோர் ரூபா 10 பெறுமதியான முத்திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே. (சி-7819)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## புதிய மாணவர்கள் பதிவு செய்தல் 1992/93கல்வியாண்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு கற்கை நெறிகளுக்கு 1992/93 கல்வியாண்டிற்கு அனுமதிக்கப்பட்டோர் தங்கள் பதிவை கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விஞ்ஞானபீடம் -9-12-93 உம் 10-12-93 உம்
கலைப்பீடம் - 13-12-93 உம் 14-12-93 உம்
மருத்துவபீடம், விவசாயபீடம் 15-12-93

மேலதிக விபரங்கள் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் அனுமதிகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலமும் பதிவுகள் 30-12-93 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும் தேவையான விண்ணப்பப் படிவங்கள் விவசாயபீடம், கிளிநொச்சி, இணைந்த பல்கலைக்கழக கல்லூரி, வவுனியா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் எவரேனும் 30 - 12 - 93 ற்கு முன்பு பதிவை மேற்கொள்ளாவிடின் அவரது தெரிவு இரத்துச் செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும்.

அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பின்வரும் ஆவணங்களை பதிவின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
3. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், நிழற்படப் பிரதியும்)
4. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதியும் நிழற்படப் பிரதியும்)
5. 8 புகைப்படப் பிரதிகள் ($2'' \times 2\frac{1}{2}''$)
6. தேசிய அடையாள அட்டை

பின்வரும் கற்கை நெறி ஒவ்வொன்றுக்கும் பதிவுக்கு உரிய சகல கட்டணங்களையும் யாழ். பல்கலைக்கழகத்தில் காசாகச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் சமர்ப்பித்தல் வேண்டும்

விஞ்ஞானபீடம்- ரூ,305/-
மருத்துவபீடம் - ரூ.350/-
விவசாயபீடம் - ரூ.275/-
கலைப்பீடம் - ரூ 175/-
(புவியியலை ஒரு பாடமாக பயில விரும்பும் மாணவர்கள் ஆய்வுகூட கட்டணமாக ரூபா 100/- மேலதிகமாகச் செலுத்த வேண்டும்)

காசுக்கட்டளை /தபாற் கட்டளை, யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் எடுத்து அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
(சி-8007)

---

## நவம்பர் 27
### மாவீரர்நாள் - 1993

தமிழீழ மண்ணின் விடிவிற்காக
வீரகாவியம் படைத்த மாவீரர்களை
தொழிலாளர்களாகிய நாங்கள்
நினைவு கூருகின்றோம்

தமிழ்பேசும் போக்குவரத்து
ஊழியர் சங்கம்.
பருத்தித்துறை சாலை.
(சி-8012)

---

யாழ். இந்துக் கல்லூரி.
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா அறிவியலரங்கு

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 28-11-93 ஞாயிறு பி. ப. 4.00

4.00 5.00

**"இளமை வளர்ச்சி"**

திரு. P. A. C. ஆனந்தராஜா
பணிப்பாளர், சாந்தி அகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்.
(சி-8003) செயலர்

---

## நினைவு கூருகின்றோம். 27. 11. 1993.

1982 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ். திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகையின் போது விழுப்புண் அடைந்து தமிழகத்தில் சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய -
தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்
முதன்முதல் விதையான வீரவேங்கை -

**லெப். சங்கர் - சுரேஸ்** (செல்வச்சந்திரன் சத்தியநாதன் - கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**துமிலன்** (இராஜகோபால் ரவிச்சந்திரன் - தம்பலகமம் - திருமலை)

முள்ளியவளை. தண்ணீரூற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். அமலன்** (முருகேசு உருத்திரமூர்த்தி - செம்மலை, அளம்பில் - மணலாறு)

இதேதினத்தில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் பலியான 5 தமிழர்கள்.

யாழ் பேராலயத்துள் புகுந்த இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு - முகாமில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் எமது ஆதரவாளர்

**மரியநாயகம் பூட்சக்கரியாஸ்- சந்திரகுமார்** (யாழ்.)

1989ஆம் ஆண்டு பொலிகண்டிப் பகுதியில் இந்திய படையினருடன்ன சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். றிச்சார்ட்** (இராமசாமி குணராசா-இறக்கண்டி - திருமலை)

கிளாலிப்பகுதியில் இந்தியப்படையினர் சுற்றிவளைத்துச் சுட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். தினேஸ்** (தில்லைநாயகம் அன்ரன் தினேஸ் - புலோப்பளை - பளை)

நாட்டுப்பற்றாளரான -

**பவுண்**

புலோப்பளைப் பகுதியில் தேசவிரோதிகளால்

---

நல்ல இனத்து மரம்
நாணயத்தில் தரம்

இந்த மண்ணிற்கான உரம்
பொருண்மியத்தின் வரம்

நல்லின மரக்கன்றுகளை உங்களுக்குத் தேவையான

## வீதி விளக்குகளுக்கு ஓராண்டு பூர்த்தி

யாழ் மாநகர சபை அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைத்து வந்த வீதி விளக்குப்பணி அண்மையில் ஓராண்டை நிறைவு செய்துள்ளதாக யாழ், மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இனி அதன் இரண்டாம் ஆண்டில் மேற்படி பணிமேலும் விருத்தி செய்யப்பட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

திரையை அனுப்பி நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்

### பட்டப்படிப்புகள் கல்லூரி

148|1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக கடந்த 15 வருடங்களாக இயங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-7819)

பதிவை மேற்கொள்ளா (சி-8007)

## நவம்பர் 27
### மாவீரர்நாள் - 1993

தமிழீழ மண்ணின் விடிவிற்காக
வீரகாவியம் படைத்த மாவீரர்களை
தொழிலாளர்களாகிய நாங்கள்
நினைவு கூருகின்றோம்

தமிழ்பேசும் போக்குவரத்து
ஊழியர் சங்கம்.
பருத்தித்துறை சாலை.

(சி-8012)

## அறிவித்தல்

யாழ் செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல், உபயோகிக்கத்தகாத பொருட்கள் ஏல விற்பனை என்பன தொடர்பான அறிவிப்புக்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

1. யாழ் செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல்

   கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் தினம்; 29-11-93 மு. ப. 11 மணி

   கேள்விப் பத்திரங்களை செயலக நிர்வாக அலுவலர் காரியாலய கேள்விப் பெட்டியில் சேர்க்கும் முடிவு திகதி; 30-11-93 பி. பகல் 2. 30 மணி

2. உபயோகிக்கத்தகாத பொருட்களின் ஏலவிற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும் மாவட்ட
ஆணையாளரும்.

(சி-8006)

செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் பலியான 5 தமிழர்கள்.

யாழ் பேராலயத்துள் புகுந்த இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு - முகாமில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் எமது ஆதரவாளர்

**மரியநாயகம் யூட்சக்கரியாஸ்- சந்திரகுமார்** (யாழ்.)

1989ஆம் ஆண்டு பொலிகண்டிப் பகுதியில் இந்திய படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். றிச்சார்ட்** (இராமசாமி குணராசா-இறக்கண்டி - திருமலை)

கிளாலிப்பகுதியில் இந்தியப்படையினர் சுற்றி வளைத்துச் சுட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். தினேஸ்** (தில்லைநாயகம் அன்ரன் தினேஸ் - புலோப்பளை - பளை)

நாட்டுப்பற்றாளரான -

**பவுண்**

புலோப்பளைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**சுதா** (கனகசபை சுதாகரன் - குட்டி வீதி, மாசார் பளை)

1990ஆம் ஆண்டு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 2 சிறுவர்கள் உட்பட 9 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு நடமாடும் பிரதேச அலுவலகத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

**சிவா**

ஆ க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவுப் பகுதியில் ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்திருந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

**லெப். கணேஸ்** (சாம்பசிவம் தயானந்தன் - மண்டூர் - மட்டு)

வவுனியா, மாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

**ஈஸ்வரன் - கில்மன்** (வேலுப்பிள்ளை புஸ்பராசா - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

ஆகியோரை இந் நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7996)


நல்ல இனத்து மரம் — இந்த மண்ணிற்கான உரம்
நாணயத்தில் தரம் — பொருண்மியத்தின் வரம்

நல்லின மரக்கன்றுகளை உங்களுக்குத் தேவையான எண்ணிக்கையில் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனைக்கென உள்ள மரக்கன்றுகளின் விபரம்

| | |
|---|---|
| 0 ஒட்டு மாங்கன்று | 0 ஒட்டுத் தோடை |
| 0 ஒட்டுத் தேசி | 0 பூழுநெல்லி |
| 0 அருள்நெல்லி | 0 கமுகம் கன்று |
| 0 பலாக்கன்று | 0 கொடித்தேசி |
| 0 கொடித்தோடை | 0 மாதுளை |
| 0 கொய்யாக்கன்று | 0 சப்பொடிலா |
| 0 அகத்திக்கன்று | 0 லாவுழுக்கன்று |
| 0 இலபம் கன்று | 0 மலைவேம்பு |
| 0 அசோகா | 0 சமண்டலை |

உங்களுக்குத் தேவையான நல்லின மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

**மேஜர் பிரதாப் செட்டி பண்ணை**
இராச வீதி, கோண்டாவில்.

(சி-8005) "பசுமைப் புரட்சி தமிழீழத்தின் எழுச்சி"



ஆயிரம், ஆயிரம் மாவீரரே; ஆருமைப் போலுலகில் உயிர்வரே!
பாயிரம் பாடினும் இணையாமோ; பாரதில் எழுந்திடும் தமிழீழமே!

# நதியா ஜுவல்லறி

(ஸ்ரான்லி வீதிச சந்தி)



2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நதியா நகை மாளிகைக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை என்பதை எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறேன்.

(8001)

பூரண உரிமையாளர்: சண்முகம் இராஜேஸ்வரன் (தவம்)

## இதய அஞ்சலி

**லெப். கணேஷ் 2-ம்லெப்.தினேஷ்**

செல்வன் செல்வன்

**தி.டொமினிக்சாந்தன் தி.அன்ரன்தினேஷ்**

05. 08. 1964 < பிறப்பு: > 13. 06. 1969

21. 11. 1986 < வீரச்சாவு: > 27. 11. 1989

"நீதியின்பால் பசிதாகம் உள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவார்கள்"

ஜோதி குடும்பமும்,
சில்லாலை மக்களும்.

(6703)

## வீரவணக்கம்





**2-ம்லெப்.தினேஷ் லெப்.கணேஷ்**

செல்வன் செல்வன்

**தி.அன்ரன் தினேஷ் தி.டொமினிக்சாந்தன்**

பிறப்பு: 13-06-69 பிறப்பு: 05-08:64

வீரச்சாவு: 27-11-89 வீரச்சாவு: 21-11-86

"உங்கள் சுவடுகளில் தொடரும்
எங்கள் பாதங்கள்"

''சாந்தினேஷ்
பளை.

குடும்பத்தினர், நண்பர்கள்.

(6644)

## மாவீரர் நினைவாக...

மண்ணின் மைந்தர்கள் நீங்கள்
மறவர் கூட்டத்து வேங்கைகள்
மண்ணிதனை மீட்கும் போரில்
மண்டியிட மாட்டாத தீரர்கள்!

வெய்யில் தகிக்கும் நிலத்தில்
விண்ணெளும் தீயின் சுவாலையின்
பொய்யதைப் பொருட் படுத்தாமல்
போருக்கு விரைந்த மாவீரர்கள்!

கையதில் ஆயுதம் ஏந்தி
கால்களைத் தூக்கி உந்தி
வையத்தை வளைத்துள்ள பீடை

## பொதுக் கூட்டம்

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் சங்க யாழ் பிராந்தியக் கிளையின் 20 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சிய மேல்மாடியில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட அரசாங்க வைத்தியசாலைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கண் மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் பற்றி அரசாங்கத்தைகண்டிக்கும் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்க

### பொதுக்கூட்டம்

12-11-93,ல் நிகழ்ந்த விமானத் தாக்குதலினால் ஏற்பட்ட வர்த்தக இழப்புகள் பற்றிய கலந்துரையாடல் 29-11-93 திங்கள் பி ப.3மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் நகர ஆணையாளர், உ. அ அதிபர், நிதிப் பொறுப்பாளர், அரசியல் பொறுப்பாளர் கலந்து கொள்வார்கள். சகல வர்த்தகர்களும், அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவும்.

சாவகச்சேரி கைத்தொழில்
வர்த்தக சங்கம்

(5075)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

### கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடாத்தும்

# "கணனி, இலத்திரனியல் கண்காட்சி"

1993 நவம்பர் 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கென விளம்பரப்படுத்தப்பட்டு 10-ம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசெம்பர் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படு மென்பதை அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(சி-8000)

# மாவீரர் நாள் நவம்பர் - 27

தேகக் குருதியை மையாக்கி தேசப்படத்தை வரைவதற்கு
தாகம்கொண்டு செயற்பட்ட தமிழினத்தின் தலையாய புத்திரரே!
வானம் முழுதுமே தாளாகி வையம் முழுதும் விரிந்தாலும்
மானம் காத்த உங்கள் வீரம் பாடப் போதாதே!

- சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
வடமராட்சி கிழக்கு, கிளை — 8,
மருதங்கேணி வீதி, நாகர்கோவில் சந்தி.

(6691)

## தவறிவிட்டது

கிளாலியிலிருந்து 23ஆம் திகதி இரவு டிராக்டர் பிரயாணத்தின்போது 40,000 ரூபா பெறுமதியான பொலித்தீனால் சுற்றப்பட்ட சிவப்பு பாய்க் தவறிவிட்டது. இதனுள் பணம் 10,000 ரூபா, உடுப்புக்கள், பாஸ்போட், போட்டோ, கண்ணாடிக் கூடு, சில பொருட்கள் உள்ளன. பாய்க்கைக் கண்டெடுத்து வி. வைரமுத்து, "சரஸ்வதி வாசா", நாகலிங்கமுதலி வீதி, பருத்தித்துறையில் ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(6708)

### அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

உரும்பராய் வீதி, மருதனாமடம்.

## முக்கிய அறிவித்தல்

### கிளைக்குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுக்கள் தெரிவிற்கான நியமனப்பத்திரங்கள் பின்வரும் திகதியில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

01. நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 04-12-93 சனிக்கிழமை காலம் - மு. ப. 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை அபேட்சகர்கள் நியமனத்தில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அன்றைய தினம் மு. ப 10.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. தேர்தல் நடைபெறும் திகதி 11-12-93 சனிக்கிழமை. நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கிளை இலக்கம் | ஏற்றுக்[illegible]கொள்ளப்படும் இடம் |
|---|---|
| 01 | இணுவில் பரராஜசேகரப் [illegible] பிள்ளையார் கோவில் அருகாமையில் உள்ள நிவார[illegible] நிலையம் |
| 02 | சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய் நிவாரண நிலையம் |
| 03 | அளவெட்டி தெற்கு, ஆலடி 3-வது கிளை |
| 04 — | கோண்டாவில் இ. போ. ச டிப்போ வீதியிலுள்ள நிவாரண நிலையம் |
| 05 | உரும்பராய் நிவாரண நிலையம் |
| 06 | அளவெட்டி தெற்கு ஆலடி, 3-வது கிளை |
| 07 | அளவெட்டி தெற்கு, 7-வது கிளை |
| 08 | மல்லாகம் சந்தி, கிளை 08 |
| 09 | கல்லாரை, மல்லாகம் கிளை 09 |
| 10 | மல்லாகம் சந்தி, கிளை 10 |
| 11 | கலைநகர், அளவெட்டி தெற்கு கிளை 11 |
| 12 | நீதிமன்ற வீதி, மல்லாகம், கிளை 12 |

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-11-93

**நா. தவநாதன்**
தேர்தல் உத்தியோகத்தர்

(சி-7995)

எங்கள் பாதங்கள்"

"சாந்திநேஷ் பளை. குடும்பத்தினர், நண்பர்கள்.

(6644)

## மாவீரர் நாள் நவம்பர்-27

தேசுக் குருதியை மையாக்கி தேசப்படத்தை வரைவதற்கு
தாகம்கொண்டு செயற்பட்ட தமிழினத்தின் தலையாய புத்திரரே!
வானம் முழுதுமே தாளாகி வையம் முழுதும் விரிந்தாலும்
மானம் காத்த உங்கள் வீரம் பாடப் போதாதே!

– சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
வடமராட்சி கிழக்கு, கிளை — 8,
மருதங்கேணி வீதி, நாகர்கோவில் சந்தி.

(6691)

நிலையம்
03 அளவெட்டி தெற்கு, ஆலடி 3-வது கிளை
04 – கோண்டாவில் இ. போ. ச டிப்போ வீதியிலுள்ள நிவாரண நிலையம்
05 உரும்பராய் நிவாரண நிலையம்
06 அளவெட்டி தெற்கு ஆலடி, 3-வது கிளை
07 அளவெட்டி தெற்கு, 7-வது கிளை
08 மல்லாகம் சந்தி, கிளை 08
09 கல்லாரை, மல்லாகம் கிளை 09
10 மல்லாகம் சந்தி, கிளை 10
11 கலைநகர், அளவெட்டி தெற்கு கிளை 11
12 நீதிமன்ற வீதி, மல்லாகம், கிளை 12

கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம். நா. தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்
16-11-93 (சி-7995)

## மாவீரர் நினைவாக...

மண்ணின் மைந்தர்கள் நீங்கள்
மறவர் கூட்டத்து வேங்கைகள்
மண்ணிதனை மீட்கும் போரில்
மண்டியிட மாட்டாத தீரர்கள்!

வெய்யில் தகிக்கும் நிலத்தில்
விண்ணெளும் தீயின் சுவாலையின்
பொய்யதைப் பொருட் படுத்தாமல்
போருக்கு விரைந்த மாவீரர்கள்!

கையதில் ஆயுதம் ஏந்தி
கால்களைத் தூக்கி உந்தி
வையத்தை வளைத்துள்ள பீடை
வரண்டிட ஆகுதி ஆனவர்கள்!

ஞானதுர்க்கா
நகை மாளிகை
218H, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

(8002)

# மாவீரர் நினைவலைகள்

தமிழிற்காய் புலியாகி
தமிழ் மண்ணுக்கே வித்தாகி
மாவீரப் புகழேந்தி
எம் நெஞ்சங்களில் நிறைந்திட்ட

உம் நினைவுகள் நிறைவெய்திட
எம் தலைமுறையில் வழிசெய்ய
வல்லவரெல்லாம் ஆயுதம் தாங்க
ஏனையோரெல்லாம் வளங்கள் பெருக்குவோம்.

**படமாடம்** அர்ச்சுனா வீதி

**எழிலகம்** மணிக்கூட்டு வீதி

**பசுஞ்சோலை** மின் நிலைய வீதி

**மின்வளம்** கஸ்தூரியார் வீதி

**சுவையருவி** மின் நிலைய வீதி

சுவையருவி **பாணகம்** நாவாந்துறை

**சுவையருவி** நெல்லியடி

**நீர்நிதி** மானிப்பாய் வீதி

**இரும்பு விற்பனை அகம்** அர்ச்சுனா வீதி

**இன்சுவை** மணிக்கூட்டு வீதி

**மலிவகம்** பாசையூர்

**யாழ் வணிக மாடம்** மருத்துவமனை வீதி,

**மலிவகம்** நாவாந்துறை

**நீரூர்தி** பொதி ஏற்றியிறக்கும் சேவை பருத்தித்துறை

(சி-7999)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
01-09-1970

உதிர்வு:
27-11-1989

**கனகசபை சுதாகரன் (சுதா)**

தமிழீழ விடிவுக்காக கன்னுயிரை அர்ப்பணித்த
மாவீரன் குட்டி - உன்
அண்ணாவை நினைவு கூர்ந்து
ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தவென
விரைகையிலே .... புலோப்பளைப் பகுதியில்
வஞ்சமுடன் மறைந்திருந்த - இந்திய
இராணுவ அரக்கனின் கோரத்தனத்துக்குப்
பலியாகிப் போனாயோ.

உன் நினைவால் வாடும்,

குட்டி வீதி, மாசார்.

தந்தை, தாய், சகோதரன்.

(6668)

# மாவீரர் நினைவு நாள் நவம்பர் - 27

நீங்கள் பூசிக்கப்பட வேண்டியவர்களா
ஆம் மக்களால்
பூசிக்கப்பட்டவர்கள்; பூசிக்கப்படுபவர்கள்!
உங்கள் உடல் பூத்த நீறும்
சுதந்திரக்கதை பேசுவதொன்றும்
புதுமையில்லை
ஏனெனில் அவை இந்த மண்ணின்
உயிர்ப்பாயிற்றே!



இந்த மண் அடிமைப்பட்டிருப்பதை
ஏற்காதுதான்
நீங்கள் மாவீரர் ஆனீர்கள்!
நீங்கள் புதைக்கப்படுவதில்லை
என்பதால்தான்
போர்க்களங்களில் உங்களின்
ஆயுதங்கள் மீண்டும், மீண்டும்
நெருப்பை உதிர்க்கின்றன!

உங்கள் எண்ணங்களை நாங்கள்
நெஞ்சங்களில் சுமக்கின்றோம்!
உங்கள் அந்தப் புனிதமான கனவு
இந்த மண்ணில் நனவாகும்!
எங்கள் இல்லங்கள் மட்டுமல்ல
இதயங்கள் தோறும்
உங்கள் நினைவுகள் நீங்காமல் நிற்க
பூசிக்கப்படுவீர்கள்!



எஸ்-எம்-பெர்ஞன்டோ

580, மருத்துவமனை வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

(சி-8008)

இந்த மண்ணில் நனவாகும்!
எங்கள் இல்லங்கள் மட்டுமல்ல
இதயங்கள் தோறும்
உங்கள் நினைவுகள் நீங்காமல் நிற்க
பூசிக்கப்படுவீர்கள்!

(சி-8008)

எஸ்-எம்-பெர்ஜுன்டோ

580, மருத்துவமனை வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

# மாவீரரே! இன்று உமை நினைவு கூருகின்றோம்...

குருதியைச் சிந்தி நின்று
குவலயம் வியக்க வைத்தீர்!
வரும் பகை சிதற வைத்தே
வையத்தில் பெருமை பெற்றீர்!
பண்டைய தமிழர் வீரம்
பகர்ந்திட களங்கள் கண்டீர்!
எண்ணத்தில் நிறைந்து நின்றே
எம் தலை நிமிரச் செய்தீர்!
இன்றுமை நினைவு கூர்ந்து
இறுமாப்பு எய்தும் போதும்,
என்றுமே மறவா உங்கள்
நினைவிலே நனைகின்றோம்.



என்றும் மறவா உங்கள் நினைவில்
இன்றும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

**கைத்தொழில் வர்த்தகர் சங்கம்**

சாவகச்சேரி

(5073)

### சிந்தனைக்கு

வீரியத்துடன் வெளியேறும் அம்புகள்தான்
வில்லுக்குப் பெருமை சேர்க்கிறது.

-- கலீல் ஜிப்ரான்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 27-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# மகத்தான சாதனைகள் படைத்த மாவீரர்களை மக்கள்மன நிறைவோடு நினைவுகொள்ளும் நவ-27

தேச விடுதலைக்காக மரணித்த
மாவீரர்களுக்கு
தமிழீழ மண்ணில்
மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று
இவ் எழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய
நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது
விடுதலைப் புலி வீரர்களில்
முதலாவதாக வீரச்சாவெய்திய
மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்)
நினைவுநாளை
நவம்பர் 27 ஐ
தமிழீழ தேசம்
மாவீரர் நாளாகப் பிரகடனம்
செய்துள்ளது.
வருடந்தோறும்
இப் புனித நாளினை
தமிழினம்
உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது.
நினைவு கூருகின்றது.

மாவீரர்பணிமனை
அரசியல்துறை
தமிழீழவிடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நவம்பர் 27-ம் திகதி இது தமிழ் மக்களின் வாழ்விலே மிகவும் மகிமை பொருந்திய ஒரு நாளாகும். தமிழீழ தேசிய இனத்தின் உயர்வுக்கு வழிகள் சமைக்கும் நாளாகவும் இது இருக்கின்றது. தமிழீழ மக்களின் அனைத்து உழைப்புகளையும், தமிழினத்தின் உன்னத பண்புகளை வெளிப்படுத்தி வைக்கும் வகையிலே ஆற்றிட ஊக்குவிக்கும் இயக்கு சக்தியாகவும் இந்த நவம்பர் 27-ம் நாள் இயங்குகின்றது.

தமிழீழ விடிவிற்காக தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவர்களின் மகத்தான சாதனைகளின் வரலாறுகளை தமிழீழ மக்களுடன் மனித நேயம் படைத்த அனைத்து மக்களும் மன நிறைவோடு நினைவுகொள்ளும் ஏற்றம் மிகுந்த நாளாக நவம்பர் 27 திகழ்கிறது. மாவீரர் நாள் என இந்த நாளுக்கு மேன்மை மகுடம் சூட்டப்பட்டுள்ளது. இந்த நாள் அனைவராலும் புனித நாளாகப் போற்றப்படுகின்றது.

துன்பப் புயலிலே சிக்குண்டு துடித்து நித்தம் துயரப்பட்டுக் கிடக்கும் தமிழீழ மக்களின் அவல வாழ்வு அகன்று, இன்பம் மிகுந்த சந்தோச சுதந்திரவாழ்வை மனதிற்கு இதம் தரும் வகையிலே தமிழ் மக்கள் அடைவார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விடிவின் வடிவமான ஒளி நாளாகவும் இந்நாள் துலங்குகின்றது. இது தமிழீழத்தின் தேசிய நாளாகவும் இருக்கின்றது.

இம் மாவீரர் நாளை அணிசெய்யும் வகையிலே மாவீரர் வாரம் கொண்டாடப்படுகின்றது. நவம்பர் 21-ம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகியது.

இம்மாவீரர் வாரநிகழ்வுகள் மிகவும் சிறப்புடன் கொண்டாடவேண்டிய கடப்பாட்டில் தமிழீழ மக்கள் உள்ளார்கள். இது அவர்களுக்கான ஒரு வரலாற்றுக் கடனாகும் இக்கடன் தமிழீழ மக்களால் நன்கு நிறைவேற்றப்படுகின்றது. தமிழீழ மக்களின் வாரிசுகளாக பிறப்பெடுத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஆகுதி ஆக்கிக்கொண்ட மாவீரர்கள் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களின் வாழ்வியல் உயர்வுக்கும் இறுக்கமான உந்து சக்தியாக விளங்குகின்றார்கள்.

இந்த மாவீரர்களின் சாதனை வரலாறுகள் வரலாற்று ஏட்டில் புதிய புயல் நிகழ்வுகளாக வரைந்தும், வரையப்பட்டும் வருகின்றன. எமது மாவீரர்களின் வரலாற்று உண்மைகளை உணரும் உலக மக்கள் அனைத்து உலக தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குள்ளே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தனிச் சிறப்பையும் இனங்கண்டுள்ளனர். மிகப் பெரிய ஈகங்களை ஆற்றி வரலாறு படைத்த மாவீரர்கள் பிறப்பெடுக்கும் தாய் வயிறு தமிழீழ மக்களிடத்தில்தான் உண்டு என உலகோர் இன்று வாய்விட்டுக் கூறுகின்றனர்.

இதனால் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாய தர்மங்களையும், புயலின் மையமாக நின்று செயல்படும் எமது தலைமைத்துவச் சிறப்பும், மேன்மையையும், தமிழீழ மக்களின் தேசிய உணர்வையும், விடுதலைப் போராளிகளின் திறன் நிலைகளையும் உலக மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.

மொத்தத்தில் இன்று தமிழீழ மக்களின் எல்லாவிதமான வளர்ச்சி உயர்வுகளுக்கும் மாவீரர்கள் வழிகோலியவர்களாக இருப்பதை நன்கு உய்த்து உணர முடிகிறது

தமிழீழ மக்களின் மேன்மையை உயர்த்திய மாவீரர்களின் நினைவாகக் கொண்டாடப்படும் மாவீரர் வார நிகழ்வுகளைச் சிறப்புடன் கொண்டாடுவதின் மூலம் தமிழீழ மக்கள் தங்கள் மேன்மையை இன்னும் உயர்த்திக் கொள்கின்றார்கள்.

இவ்விழா தமிழீழ தேசிய விழாவாகும். தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடப்படும் விழாவும் இதுவாகும்.

தமிழினத்தின் புதிய வரலாற்று வாழ்வின் பண்பாட்டு விழாவாகவும் இயல்பாக்கம் பெற்றுவிட்ட மாவீரர் வார விழா மாண்டு, மறைந்து, புதைந்து வழக்கிழந்து போன தமிழரின் உயரிய பண்பை மீண்டும் வெளிக் கொணர்ந்து அரங்கேறச் செய்த விழாவாகவும் இருக்கின்றது.

நல்லதொரு தலைவன் வழிகாட்டியதால் தலையெடுத்து விட்டோம், சிறப்புற உயர்கிறோம், பொலிவுற விளங்குகிறோம், மாவீரர் துதிபாடும் தமிழ்ப்பண்பு விழாவைக் கொண்டாடும் வாய்ப்பும் பெற்று நிற்கிறோம்.

நள்ளிரவு 12மணி 1செக்கனுக்கு எழுப்பப்படும் மாவீரர் நினைவொலியின்போது அனைவரும் எழுந்து நின்று மாவீரர் மௌனவணக்கம் செய்திடுவோம் மாவீரர் நினைவொலி முடிய மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றுவோம். அனைவரும் விழித்திருந்து இவ்நள்ளிரா வேளையில் மாவீரர்களுக்கான இக்கைங்கரிய காரியங்களை மனநிறைவுடன் ஆற்றி, மாவீரர் நாளை உளப்பூரிப்புடன் வரவேற்போம். கொண்டாடுவோம்.

தேசம் எழுந்திங்கு தன்தோற்றம் காட்டிட
தேகம் எரித்தவர் தூயவிழாத்
திறன்காண்போம்

## தமிழ் இனத்தின் விடிவெள்ளிகள்

இன்று மாவீரர் நாள்.

தமிழ் மக்களுக்காகவும், தமிழீழ மண்ணிற்காகவும் தம்முயிரைத் தற்கொடை செய்து கொண்ட வீரமறவர்களை தமிழ்மக்கள் மனஎழுச்சியுடன் நினைவு கூரும் நாள்.

தமிழீழ விடுதலைப் போரில் இதுவரையில் 6000க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தமிழீழ தேசத்தின் விடியலுக்காய் தம்முயிரைத் தற்கொடை செய்து கொண்ட இவர்கள் போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரியவர்கள்.

இவர்கள் தமிழீழமென்னும் புனித இலட்சியத்திற்காகப் போராடியவர்கள் இதன் மூலமே தம் மக்கள் பாதுகாப்புடனும், சுதந்திரமாகவும் வாழ முடியும் என்ற நம்பிக்கையுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள்.

இதற்காக அவர்கள் தமது இளமையின் கனவுகளையும், சுகங்களையும் மட்டும் தியாகம் செய்யவில்லை. பெரும் துன்பங்களையும், சவால்களையும் எதிர்கொண்டு தமிழ்மக்களின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தம்மை பலியிட்டுக் கொண்டவர்கள்.

தமிழினத்தின் இன்றைய வீரவரலாறு அம்மாவீரர்களின் இரத்தத்துடனும், தசையுடனும் கலந்து போயுள்ளது. இம்மாவீரர்கள் கற்பனைக்கு எட்டாத விதத்திலும் மற்றவர்கள் ஆச்சரியத்தில் வியக்கும் வண்ணமும் தமது ஆற்றலையும், தமது அர்ப்பணிப்பையும், மனோதிடத்தையும் வெளிக்காட்டியவர்கள்.

இத்தேசிய வீரர்களின் அர்ப்பணிப்பும், மனோதிடமும் சிங்களப் பேரினவாத சக்திகளின் இனவெறியில் இருந்து மட்டுமல்ல, இந்திய ஏகாதிபத்திய சக்திகளிடம் இருந்தும் தமிழ் மக்களைக் காத்தது. தமிழ்த் தேசிய இனம் என்பது இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இம்மாவீரர்களின் [illegible]

மேற்கு நாடுகளில் உள்ள

## சிறிலங்கா தூதரகங்கள் மீது ஜலண்ட் பத்திரிகை பாய்ச்சல்

மேற்குநாடுகளில்சிறிலங்கா தூதுவரகங்கள் பெரும் பொருட் செலவில் இயங்குகின்ற போதும் விடுதலைப்புலிகளின் பிரசார நடவடிக்கைகளை அவற்றினால் தடுத்து நிறுத்த [illegible] எனப்படும் உலகத் தொலைக் காட்சி சேவையில் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் கலந்து கொண்டதையும், சி. என். என். தொலைக் காட்சி மிகவும் பிரபல்யமானது என்பதையும், இதில் விடுதலைப் புலிகள் தோன்றுவதைத் தடுக்காமை குறித்துமே ஜலண்ட் இவ்வாறு ஆதங்கம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## புலர்கின்ற தமிழ் மண்ணில் மலர்கின்ற பூக்கள்!

திசை யெட்டும் மாவீரர் புக ழோசை கேட்கும்!
தேசத்தை அவர் செய்த தியாகங்கள் மீட்கும்!
இசை யோடு களமாடித் தமிழீழம் மீட்க
இன்னுயிரை ஈந்தோரை இதயங்கள் வாழ்த்தும்!

பூவாகி மணம் வீசும் பொலிவான இளமை
புயலான புலிவீரர் சாய்கின்ற நிலைமை
பாவோடு பொருளாகக் கலந்த மாவீரர்

பாதுகாப்புடனும், சுதந்திரமாகவும் வாழ முடியும் என்ற நம்பிக்கையுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள்.

இதற்காக அவர்கள் தமது இளமையின் கனவுகளையும், சுகங்களையும் மட்டும் தியாகம் செய்யவில்லை. பெரும் துன்பங்களையும், சவால்களையும் எதிர்கொண்டு தமிழ்மக்களின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தம்மை பலியிட்டுக் கொண்டவர்கள்.

தமிழினத்தின் இன்றைய வீரவரலாறு அம்மாவீரர்களின் இரத்தத்துடனும், தசையுடனும் கலந்து போயுள்ளது. இம்மாவீரர்கள் கற்பனைக்கு எட்டாத விதத்திலும் மற்றவர்கள் ஆச்சரியத்தில் வியக்கும் வண்ணமும் தமது ஆற்றலையும், தமது அர்ப்பணிப்பையும், மனோ திடத்தையும் வெளிக்காட்டியவர்கள்.

இத்தேசிய வீரர்களின் அர்ப்பணிப்பும், மனோதிடமும் சிங்களப் பேரினவாத சக்திகளின் இனவெறியில் இருந்து மட்டுமல்ல, இந்திய ஏகாதிபத்திய சக்திகளிடம் இருந்தும் தமிழ் மக்களைக் காத்தது. தமிழ்த் தேசிய இனம் என்பது இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இம்மாவீரர்களின் தியாகமுமே அடித்தளமாகியது.

தமிழ் மக்கள் அன்று சாத்வீக ரீதியில் தமது உரிமை கோரியபோது சிங்களப் பேரினவாதம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, வெறுங்கையுடன் நின்ற தமிழ் மக்களைப் பார்த்து போருக்கு அறைகூவல் விடுத்தது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு என்று எதுவும் இல்லை எனவும் கூறியது. அதேவேளை காலத்திற்குக் காலம் இனவன்முறையையும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது,

ஆனால், தமிழ்த் தேசிய இனத்தை தொடர்ந்தும் ஆயுத முனையில் ஆளலாம், ஆயுத முனையில் அடிமைப்படுத்தலாம் என்ற சிங்களப் பேரினவாதத்தின் கனவை மாவீரர்கள் கலைத்தார்கள். தமிழ்த் தேசிய இனம் தனது உரிமைக்காக எந்த அர்ப்பணிப்புக்களையும் செய்யத் தயாராக உள்ளது என்பதை உலகிற்குப் புரிய வைத்தார்கள்.

இதேவேளை, சிங்களப் பேரினவாதம் மட்டுமல்ல எந்த ஏகாதிபத்திய சக்தியாக இருப்பினும் தமிழ் இனம் அடிமைப்பட்டு வாழப்போவதில்லை என்பதையும் இவர்கள் பிரகடனப்படுத்தினர். இலங்கைத் தீவை தனது கொல்லைப்புறமாக எண்ணிக் கொண்டு தமிழ் மக்கள்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்ட இந்திய ஏகாதிபத்தியத்திற்கு தமது மனோவலிமை மூலம் மாவீரர்கள் சவால் விட்டனர். இந்திய ஏகாதிபத்தியத்தை தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றக் காரணமாயினர்.

இம் மாவீரர்களின் மலைக்கத்தக்க இச் சாதனைகள் தமிழ் மக்களை தலை நிமிர வைத்தது. உலகில் விடுதலைக்காகப் பெரும் அர்ப்பணிபுக்களைச் செய்து கொண்டிருக்கும் இனம் என பெருமைப்பட வைத்தது.

ஆனால், இம்மாவீரர்கள் தனியாக தமிழீழ தேசத்தின் தேசிய வீரர்கள் மட்டுமல்ல. உலகின் ஒடுக்கப்படும் இனங்களின் வழிகாட்டிகள். ஒடுக்கப்படும் இனங்களுக்கு விடிவெள்ளிகள். சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கங்களின் நம்பிக்கை நட்சத்திரங்கள். எந்த ஒரு சிறிய இனமும் தமது சுதந்திரத்திற்காக அர்ப்பணிப்புக்கள் செய்யத் தயாராக இருக்குமெனின் எந்த ஒடுக்குமுறை சக்திகளினாலும் அவர்களைத் தோற்கடித்து விட முடியாது என்பதை உணர்த்திய வீரர்கள்.

இவ்வாறு, தமிழ் மக்களிற்காகவும், மண்ணிற்காகவும் அர்ப்பணிப்புக்கள் புரிந்த இம் மாவீரர்களுக்கு தமிழ் மக்கள் செய்யும் கௌரவமென்பது மாவீரர் நாளில் அவர்களை நினைவு கூருவது மட்டுமல்ல, அவர்களின் இலட்சியப்பாதையில் தொடர்ந்து செல்வதே ஆகும்.

தமிழீழ விடிவிற்காக தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவர்களின் மகத்தான சாதனைகளின் வரலாறுகளை தமிழீழ மக்களுடன் மனித நேயம் படைத்த அனைத்து மக்களும் மன நிறைவோடு நினைவுகொள்ளும் ஏற்றம் மிகுந்த களை ஆற்றி வரலாறு படைத்த மாவீரர்கள் பிறப்பெடுக்கும் தாய் வயிறு தமிழீழ மக்களிடத்தில்தான் உண்டு என உலகோர் இன்று வாய்விட்டுக் கூறுகின்றனர்.

இதனால் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாய தர்மங்களையும், புயலின் மைய உளப்பூரிப்புடன் வரவேற்போம். கொண்டாடுவோம்.

தேசம் எழுந்திங்கு தன்தோற்றம் காட்டிட
தேகம் எரித்தவர் தூயவிழாத்
திறன்காண்போம்

மேற்கு நாடுகளில் உள்ள

# சிறிலங்கா தூதரகங்கள் மீது ஐலண்ட் பத்திரிகை பாய்ச்சல்

மேற்குநாடுகளில்சிறிலங்கா தூதுவரகங்கள் பெரும் பொருட் செலவில் இயங்குகின்றபோதும் விடுதலைப்புலிகளின் பிரசார நடவடிக்கைகளை அவற்றினால் தடுத்து நிறுத்த முடியவில்லையே என்று சண்டே ஐலண்ட் பத்திரிகை ஆதங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் பத்துவருட காலத்தின் பின்னரும் கூட விடுதலைப் புலிகளின் பிரசார வேலைகளுக்கு நிகரான பிரசாரஅமைப்பைவெளிநாடுகளிலுள்ள தூதுவரகங்கள் ஏற்படுத்தாத நிலையில் அவை பற்றி மீள்பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்றும் அதன் ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளாலிப் போர் மூண்ட காலத்தில் சி. என். என். எனப்படும் உலகத் தொலைக் காட்சி சேவையில் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் கலந்து கொண்டதையும், சி. என். என். தொலைக் காட்சி மிகவும் பிரபல்யமானது என்பதையும், இதில் விடுதலைப் புலிகள் தோன்றுவதைத் தடுக்காமை குறித்துமே ஐலண்ட் இவ்வாறு ஆதங்கம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## யாழ். மாவட்டத்தில் இதுவரை 283 பேருக்கு கொலரா நோய்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் கொலரா நோய்க்கு இதுவரை 611 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இவர்களுள் 283பேருக்கு கொலரா நோய் இருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நோய்க்கு இலக்கானவர்கள் என சந்தேகிக்கப்பட்டோரில் சகலசுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்டோரில் 611பேர் யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுள் 283பேர் கொலரா நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு ரீதியான விபரம் வருமாறு: யாழ்ப்பாணம் 273பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள். 119 பேர் கொலரா நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்கள் சாவகச்சேரியில் 105பேரில் 27 பேருக்கும், மானிப்பாயில் 122 பேரில் 48 பேருக்கும், கோப்பாயில் 71 பேரில் 23 பேருக்கும், தெல்லிப்பழையில் 37 பேரில் 16 பேருக்கும் கொலரா நோய் பீடித்திருந்தது என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற வாராந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழிளைஞர்கள் கைது கொழும்பில் தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதாவது தொடர்வதாகவும் கடந்த வாரத்தில் மட்டும் 16 - 35 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 175 பேர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக லங்கா தீப ஞாயிறு இதழில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் இயங்கும் லொட்சுகளில் தங்கியிருப்போரில் 98 வீதத்தினர் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களை சோதனையிட்ட போதே மேற்படி இளைஞர்கள் கைதானதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழர்கள் சிங்களவர்களின் வீடுகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதில் போட்டியிடுவதாகவும், இதற்கு இடம் கொடுக்க வேண்டாமெனவும், பயங்கரவாதிகளுக்கு தங்க இடம் கொடுப்பது கூட குற்றமாகக் கருதப்படும் எனவும் அந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் கூறினார்.

## வீடு பார்க்கச் சென்றவர் மிதிவெடியில் காலிழந்தார்

(யாழ்ப்பாணம்)

உடுத்துறை பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஒருவர் தனது வீட்டைப் பார்க்க சென்றபோது தவறுதலாக மிதிவெடியில் சிக்கியதில் தனது இடதுகாலை இழந்தார்.

மேற்படி சம்பவம் கடந்த திங்கள் மாலை 3 00 மணியளவில் நடந்துள்ளது. இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; மூன்று பிள்ளைகளின் தந்தையான இராஜரட்ணம் பஞ்சரட்ணம் (வயது35) என்பவர் உடுத்துறையில் உள்ள தனது வீட்டை பார்க்கச் சென்றபோது மிதிவெடியில் மிதித்ததால் அது வெடித்ததில் படுகாயமுற்றார் அவரை உடனடியாக யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவந்தனர். அங்கு சிகிச்சையின்போது சிதைந்திருந்த அவரது இடதுகால் அகற்றப்பட்டது (சி)

## கருத்தரங்கு

யாழ். பிரதான வீதி, திருமறைக்கலாமன்ற கேட்போர் கூடத்தில் 28ஆம்திகதி மாலை 5 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெறும்.

சி. நந்தகுமார்(தமிழ் மகன் பி. ஏ.) ''தமிழர் பண்பாடு'' என்னும் பொருளில் இரண்டாவது உரையை நிகழ்த்துவார்.. (21)

## கூட்டம்

தற்போது பகுதி நேர ஆங்கில ஆசியர்களாக கடைமை புரியும் 45 (நாற்பத்தைந்து) வயதுக்குட்பட்ட அனைவரையும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்- மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் கூடும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

## புலர்கின்ற தமிழ் மண்ணில் மலர்கின்ற பூக்கள்!

திசை யெட்டும் மாவீரர் புக ழோசை கேட்கும்!
தேசத்தை அவர் செய்த தியாகங்கள் மீட்கும்!
இசை யோடு களமாடித் தமிழீழம் மீட்க
இன்னுயிரை ஈந்தோரை இதயங்கள் வாழ்த்தும்!

பூவாகி மணம் வீசும் பொலிவான இளமை
புயலான புலிவீரர் சாய்கின்ற நிலைமை
பாவோடு பொருளாகக் கலந்த மாவீரர்
பசும் பாதமலர் போற்றித் தொழுல் நமது கடமை

சாவுக்கு அஞ்சாது சமராடும் பேர்கள்
தமிழீழ விருட்சத்தைத் தாங்குகின்ற வேர்கள்
பூமிக்கு இவரின்று புதிய புறப் பாக்கள்!
புலர்கின்ற தமிழ் மண்ணில் மலர்கின்ற பூக்கள்

வானோடு மாவீரர் புகழ் சென்று மோதும்!
வாயெல்லாம் அவர் பெயரை நாள் தோறும் ஓதும்
ஊனோடு உதிரங்கள் உரமாகும் மண்ணில்
உயிரோடு உயிராகி அவர்வாழ்வர் எம்மில்!

வாருங்கள் மாவீரர் புகழ்பாடி நிற்போம்
வழிதோறும் அவர்க்காக விளக்கேற்றி வைப்போம்
சேருங்கள், அவர் நெஞ்சத் தணியாத தாகம்
தீர்த்தெங்கள் தமிழீழ தாயகம் மீட்போம்.

நிலா தமிழின்தாசன்.

## சாந்தமாய் துயிலட்டும்!

மறவர்கள் துயில்கின்றனர்
மானிடமே பேசாதீர்
வஞ்சகரின் வலை விரிப்பை
வாரிஎறிந்திட பயணமானோர் — இன்று
சாந்தமாகித் துயில்கின்றனர்
சந்தடிகள் செய்யாதீர்!

விடுதலைக்குப் பயணமான விடிவிளக்குகள் — எதிரியை
விரட்டி அடித்துவிட்ட அகல்விளக்குகள்
சுதந்திரம் தேடிப்பாய்ந்த திருவிளக்குகள் — இன்று
நன்றாகத் துயில்கின்றனர்
சத்தம் செய்யாதீர் — மறவர்
சாந்தமாய்த் துயில்கின்றனர்!

விழித்து சிவந்த விழிகள் — இன்று
கண்மூடித் துயில்கின்றனர்
நடந்து களைத்த பாதம் — இன்று
நன்றாக ஓய்வெடுக்கின்றது
நியாயம் கேட்ட கணைகள்
ஞாலம் போற்றத் துயில்கின்றனர்
சங்கடங்கள் கொடுக்காதீர் — மறவர்
சாந்தமாய்த் துயில்கின்றனர்!

ஓலமிடும் எதிரியை ஒழித்திடப் பாய்ந்தவர்கள்
ஓயாமல் உழைத்தவர்கள் — இன்று
ஓய்வெடுத்துக் கொள்கின்றனர்
கல்லறைக் கட்டில் மீது — மறவர்
கள்ளங் கபடமற்றுத் துயில்கின்றனர்
சந்தடிகள் செய்யாதீர்
சாந்தமாய்த் துயிலட்டும்!

- மட்டுநகர் விடிவெள்ளி -

தனியரசு அமைக்க போராடுவதை...

# எமது போராட்டம் நியாயமானது மனித அறத்திற்கு இசைவானது!

தார்மீக அடிப்படையில் நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும்பொழுது நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதிபூண்டு நிற்கவேண்டும். இலட்சியத்தில் உறுதிபூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

# எமது போராட்டத்தின் வெற்றி எமது கையிலேயே தங்கியுள்ளது

இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகிறது. மக்கள் உரிமை, மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கிறது. சர்வதேச அரசியலும் சரி, ராஜதந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில்தான் செயற்படுகிறது. இந்த நிலையில் எமது போராட்டத்தின் தார்மீக நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்துவிடும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும், நாம் அந்த அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து குரல் எழுப்பிவர வேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும் ஒரு சந்தர்ப்பத்தில், சர்வதேச சூழ்நிலை எமக்குச் சாதகமாக அமையலாம். அப்பொழுது, உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எமது பக்கம் திரும்பும்

உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கி இருக்கவில்லை எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. நீதியும், நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது நாம் வலிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். தளராத உறுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும்,

# நீதியின்படி பிரச்சினையை தீர்க்க எதிரி விரும்பவில்லை!

எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை. பலாத்காரப் பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரசசினைக்கு முடிவுகட்ட முனைகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக, தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்வின்றி, முடிவின்றி இழுபடுகிறது. நீண்ட, நெடுங்காலமாக, நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழர்கள், சாவையும் அழிவையும், தாங்கொணாத் துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப்போவதில்லை எனக் காலங்காலமாக நாம் வலியுறுத்தி வந்த அரசியல் உண்மையை எமது மக்கள் இன்று ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர்,

எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்குக் குறுக்காக நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்புவில் தொடங்கி கொழும்புவரை பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்க மறுத்தது. சமரசவழியைக் கைவிட்டு, போர்க்களத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியது.

# தமிழர் உரிமை போரை அரசு 'பயங்கரவாதம்' ஆக சித்தரிக்கிறது

எனச் சித்தரித்துக் காட்ட முனைந்தது.

தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதிகிடைக்கப் போவதில்லை.

# விடுதலைப் பாதை கடினமானது ஆயினும் பயணம் தொடர்கிறது

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை

இந்தப் பாதைவழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப்பயணத்தைத் தொடர்கிறது.

இந்தப் பாதை மிகவும் கடினமானது கற்களும் முட்களும் நிறைந்தது. விலங்குகளும், விஷ ஜந்துக்களும் நிறைந்தது ஆயினும் நாம் இந்தப் பாதை வழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

எமது மாவீரர்கள் இந்தப் பாதை வழியாகவே நடந்தார்கள். எமக்கு வழிகாட்டியாக முன்னே சென்றார்கள். கற்களையும் முட்களையும் அகற்றி, பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள். விலங்குகளையும், விஷ ஜந்துக்களையும் கொன்றழித்தார்கள். அந்தப் பாதை வழியே விளக்கேற்றி வைத்தார்கள்

எமது மாவீரர்கள் ஏற்றிவைத்த அந்தச் சுடரொளியில், தெளிவாகப் புலப்படும் அந்தச்சுதந்திரப்பாதைவழியாக, நாம் எமது இலட்சியப்பயணத்தைத் தொடர்வோமாக.

## கொழும்பில் ஜீப் ஏற்படுத்திய பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு ஜனாதிபதி மாளிகை, கடற்படை தலைமை அலுவலகம், மத்திய வங்கி ஆகியன அமைந்துள்ள இடத்தில் சில நிமிட நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சில நிமிடங்களில் இப்பகுதிக்கு குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் வரைவழைக்கப்பட்டு சோதனைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டபோது ஜீப்பின் உரிமையாளர் வந்து அதனை எடுத்துச் சென்றார்.

## இடம் பெயர்வு

(கொழும்பு)

கொழும்பில் வசித்து வந்த தமிழர்களில் பலர் பாதுகாப்புக்கருதி இடம் பெயர்ந்து வேறு பகுதிக்கு சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழர்கள் தாக்கப்படலாம் என அஞ்சியே கொழும்பை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதாக கூறப்படுகிறது

## எறிகணை வீச்சு பெண் பலி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலங்காடுப் பகுதி மீது நேற்று நள்ளிரவு 12.10மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலினால் பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முத்துத்தம்பி அம்பிகாதேவி (வயது 48) என்பவரே கொல்லப்பட்டவராவார் சிறிகாந்தன் யோகேஸ்வரி என்பவரே காயமடைந்துள்ளார்.



'சுப்பர்சொனிக்' விமானம் கொக்குவில் பகுதியில் நேற்று நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் சேதமடைந்த கொக்குவில் இராமகிருஷ்ணா சாரதா மகளிர் கல்லூரியின் வகுப்பறைகள்.

# கொழும்பு நகர் ஸ்தம்பிதம் கலவரம் மூளலாமெனப் பீதி

## பாடசாலைகள், அலுவலகங்கள் செயலிழப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று பெரும் பதற்றம் நிலவியதாகவும் அங்கு இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்படைந்து சன

செய்யப்பட்டதை அடுத்தே இந் நிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கொழும்பு நகரில் பெரும் பாலான பாடசாலைகள்

தங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன, கொழும்புக்கு வெளியேயிருந்து உள்ளே பிரவேசித்தவர்களின் தொகையும் குறைவாகவே காணப்பட்டது.

தனியார் நிறுவனங்களில் ஊழியர் வரவு மிகக்குறைவாக காணப்பட்டது பல நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன என ஏஜென்சி செய்தி

லேயே தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட முனைகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக, தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக தீர்வின்றி, முடிவின்றி இழுபடுகிறது. நீண்ட, நெடுங் காலமாக, நீதிகிடைக்குமெனக் காத்திருந்த தமிழர்கள், சாவையும் அழிவையும், தாங்கொணாத் துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை.

ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர்,

எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்குக் குறுக்காக நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்புவில் தொடங்கி கொழும்புவரை பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்க மறுத்தது. சமரசவழியைக் கைவிட்டு, போர்க்களத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியது.

# தமிழர் உரிமை போரை அரசு ‘பயங்கரவாதம்’ ஆக சித்தரிக்கிறது

1990-ம் ஆண்டு, ஜூன் மாதம், இரண்டாவது கட்டமாக தமிழீழப் போர் ஆரம்பமாகிய காலந்தொட்டு, எமது விடுதலை இயக்கம், சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்து வைத்தது. பேச்சுவார்த்தைக்கு இணங்கி நாம் நேசக்கரத்தை நீட்டியபொழுதெல்லாம் சிங்களப் பேரினவாதம் அதைப் பற்றிக்கொள்ள மறுத்தது. போர் நிறுத்தம்செய்து, பொருளாதாரத் தடைகளை நீக்கி, சமாதானத்திற்கான சூழ்நிலையை உருவாக்குமாறு நாம் மாறி மாறி விடுத்த கோரிக்கைகளையும் நிராகரித்தது. சமாதானத்திற்குப் பதிலாக யுத்தத்தையும், அமைதிக்குப் பதிலாக அழிவையும் சிங்களப் பேரினவாத அரசு எமது மக்களமீது கட்டவிழ்த்துவிட்டது. இறுதியில் தமிழரின் உரிமைப் போராட்டத்தை ‘பயங்கரவாதம்’ எனச் சித்தரித்துக் காட்ட முனைந்தது. எல்லாவற்றிக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லையெனப் பகிரங்கமாகவே பிரகடனம் செய்துள்ளது.

இராணுவபலத்தைக்கொண்டு, தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற இறுமாப்பில் சிங்கள ஆளும் வர்க்கம் சமாதானத்தின் கதவுகளை இறுகச் சாத்திவிட்டது. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கியொடுக்கி ஆளவேண்டுமென்ற குறிக்கோள் முன்பிருந்ததை விடத் தீவிர போக்கை எடுத்தது. இந்த இராணுவவாதக் கடும்போக்கின் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணக் குடாநாடுமீது படையெடுப்புகளை நடத்தவும் அரசு திட்டம் தீட்டியது.

# பிரச்சினையின் விஸ்வரூபத்தை எதிரிக்குக் காட்டியுள்ளோம்

இந் நெருக்கடியான சூழ்நிலையில் தான் நாம் சிங்களப் போர் அரக்கனுக்கு தகுந்த பதிலடி கொடுக்கத் தீர்மானித்தோம்.

மண்கிண்டிமலையிலும், புலோப்பளையிலும், இறுதியாகப் பூநகரியிலும் நாம் திட்டமிட்டு நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிங்கள இராணுவவாதத்திற்குக் கொடுக்கப்பட்ட பேரடிகளாகும். இதில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போர்க்கலையில் புலிகள் இயக்கத்தின் படிநிலை வளர்ச்சியின் உயர்கட்டப் பரிமாணத்தை இந்த சமர் எடுத்துக் காட்டுகிறது. பெரும் படையணிகளை நுட்பமாக நகர்த்தி, எதிரியின் பாசறையைப் பலமுனைகளில் ஊடுருவி, பெரும் கூட்டுப்படைத் தளங்களைக்கூட துரிதகெதியில் அழிக்கவல்ல அபாரமான சக்தி புலிகளிடமுண்டு என்பதை நாம் சிங்களப் பேரினவாதத்திற்கு நன்கு உணர்த்தியுள்ளோம். இனப்பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது என்று கூறியவர்களுக்கு இனப்பிரச்சினையின் விஸ்வரூபத்தைக் காட்டியுள்ளோம் இந்தச் சமர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப் படையினர் அழிக்கப்பட்டுள்ளனர். எமது தாயக மண்மீது படையெடுப்பை நடத்தலாம், ஆக்கிரமிப்பை நிகழ்த்தலாம், அகலக்கால் வைக்கலாம் எனக் கற்பனை செய்துவரும் இராணுவவாதிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் தகுந்த பாடமாக அமையும் என நினைக்கிறேன். இராணுவத் தீர்வு என்ற பாதை எத்தகைய பயங்கரமான பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதை கொழும்பிலிருந்து ஆட்சிபுரிபவர்கள் இனியாவது உணர்ந்துகொள்வார்களென நம்புகிறேன்.

# சமரசப் பாதைக்கு எப்போதும் நாம் முட்டுக்கட்டை போடவில்லை

சிங்களப் பேரினவாத அரசு போன்று, நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமரசப் பாதைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுக்கப் பற்றிக் கொண்டு, எமது மண்மீது படையெடுப்பை நிகழ்த்தினால், அல்லது எமது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால், எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை நான் இங்கு தெட்டத்

லப்பட்டவராவார் சிறிகாந்தன் யோகேஸ்வரி என்பவரே காயமடைந்துள்ளார்.

குண்டு வீச்சுத் தாக்குதலில் சேதமடைந்த கொக்குவில் இராம கிருஷ்ணா! சாரதா மகளிர் கல்லூரியின் வகுப்பறைகள்.

# கொழும்பு நகர் ஸ்தம்பிதம் கலவரம் மூளலாமெனப் பீதி

## பாடசாலைகள், அலுவலகங்கள் செயலிழப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று பெரும் பதற்றம் நிலவியதாகவும் அங்கு இயல்பு வாழ்க்கை பெரும் பாதிப்படைந்து சன நடமாட்டமற்று வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நேற்று பாதுகாப்புகள் போடப்பட்டிருந்தபோதிலும் வீதிகளில் வாகன நடமாட்டமும் சன நடமாட்டமும் மிகக் குறைந்தளவே காணப்பட்டதாகவும் மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனக்கலவரங்கள் கொழும்பில் வெடிக்கலாம் எனவும் புலிகள் கொழும்பைத் தாக்கலாம் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டதை அடுத்தே இந் நிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கொழும்பு நகரில் பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டுக் கிடந்தன. சில பாடசாலைகள் திறந்திருந்த போதிலும் மிகக் குறைந்த அளவு மாணவர்களே அங்குகாணப்பட்டனர். பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப விரும்பாமையே இந் நிலைக்குக் காரணம் என சொல்லப்படுகிறது.

வீதிகளில் மிகக் குறைந்தளவு வாகனங்களே காணப்பட்டன பிரதான வீதிகளில் வாகனநெரிசல் இருக்கவில்லை அங்கு சென்றுகொண்டிருந்த வாகனங்களில் ஒருசிலரே காணப்பட்டனர். புகையிரதங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன, கொழும்புக்கு வெளியேயிருந்து உள்ளே பிரவேசித்தவர்களின் தொகையும் குறைவாகவே காணப்பட்டது.

அரசாங்க திணைக்கள, தனியார் நிறுவனங்களில் ஊழியர் வரவு மிகக்குறைவாக காணப்பட்டது பல நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன என ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன.

### மணியோசை

வொருமாவீரர்களதும் நினைவுக் கல்லுக்கு முன்பாக இம் மாவீரர் நினைவுச் சுடர்கள் பெற்றோரினாலும், போராளிகளாலும் ஏற்றிவைக்கப் பட்டிருந்தன

இவற்றைவிட அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரச தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மகளிர் மன்றங்கள், விடுதலைப்புலிகளின் மாவட்டச் செயலகங்கள்உட்பட ஏனைய அலுவலகங்கள், பயிற்சிப் பாசறைகள் அனைத்திலும் மாவீரர் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டன. அத்துடன் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும், வீட்டுவாயில்களிலும், மற்றும் வீதிகளிலும் மாவீரர் சுடர்கள் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன.

யாழ். குடாநாட்டில் யாழ் செயலகம் மாநகரசபை அலுவலகம், கல்வித் திணைக்களம், தபால் அலுவலகம், பல்கலைக்கழகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களிலும் இச் சுடரேற்றப்பட்டிருந்தது.

### கொக்குவிலில்

சர்மா, சாந்தினி கேதன், செபஸ்தியாம்பிள்ளை, சிவபாதம், ஆறுமுகம், நடராஜா ஆகியோரது வீடுகளும் சேதமடைந்தன

### கிழக்கில்

சட்டத்திற்கமைய ஜனாதிபதி ரத்து செய்கின்றார். தேர்தலுக்கான புதிய திகதி உரிய காலத்தில் தேர்தல் அதிகாரிகளினால் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 1994ஜனவரியில் கிழக்கு மாகாணத்தில் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளன மார்ச் மாதத்துக்குமுன் தேர்தல் வைக்கப்படும்

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் சிறிசேனகூரே பி பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

# தென்மராட்சியில் பரவலாக உலங்குவானூர்தி தாக்குதல்

## மூன்று பொது மக்கள் காயம்

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று நேற்று கொடிகாமம், சாவகச்சேரி, பளை பகுதிகளில் நடாத்திய தாக்குதல்களில் மூவர் காயம் அடைந்தனர்.

காலை 9.20 மணியளவில் கொடிகாமம் சந்தைப் பகுதியில் நடாத்திய கலிபர் தாக்குதலினால் வியாபாரியான சங்கத்தானையைச் சேர்ந்த வே நடராசா(வயது 69)என்வர் காயமடைந்தார்.

காலை 9.25 மணியளவில் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நடாத்திய கலிபர் தாக்குதலினால் கைதடி நுணாவிலைச் சேர்ந்த இ. ஜெயா (வயது 25) காயமடைந்தார். இத் தாக்குதலின்போது சில கடைகள் சேதமடைந்தன.

மேலும் 10 மணியளவில் பளைப் பகுதியில் நடாத்தப்பட்ட கிறனைட் தாக்குதலினால் பளையைச் சேர்ந்த க. கிருபநாயகம் (வயது 28) என்பவர் காயமடைந்தார் இதேவேளை கிளாலிப் பகுதியிலும் தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (86)

# வடமராட்சிப் பகுதியில் பொம்மர், ஹெலி தாக்குதல்

வல்வெட்டித்துறை மக்கள் குடியிருப்புகளமீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு மாறிமாறி குண்டுகளை வீசின.

அப்பகுதிக்கு நேற்றுக் காலை 9.30 மணியளவில் வந்த விமானங்கள் மயிலியதனைப் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசின.

இக் குண்டுத் தாக்குதல்களுக்கு அப்பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன பொம்மர்களின் குண்டுவீச்சுக்கு முன்னதாக அப்பகுதிக்கு வந்த ஒரு உலங்குவானூர்தி கம்பர்மலை வல்வெட்டித்துறை, மயிலியதனை, வல்வை குடியிருப்புகள் மீது பரவலாக கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. (யோ)

# நொச்சிமோட்டை பகுதியில் பயணிகள் மீது தாக்குதல்

## நான்கு பொதுமக்கள் காயம்

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் பயணிகள் மீதான சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்தநான்குபேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கனகராயன்குளம் வடக்கைச் சேர்ந்த ஏ. தனிநாயகம் (36) என்பவர் காயமடைந்தவர்களில் ஒருவராகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது